330

Reg. No. M. 2147.

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to

Agriculture and its allied subjects.

OFFICE OF THE REGISTRAR OF
17 APR 1928
MADRAS

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

Voi.11 புத்தகம்11	விபவஞூ சித்திரை மீ 1உ 1928-ம் ஞூ ஏப்ரல் மீ 13உ	பிரதி.**1** **NO. 1**

Contents	Page	பொருளடக்கம்	பக்கம்
Ourselves	1	நாம்	1
ws And Notes	2, 7, & 23	குறிப்புகள்	2, 7, & 23
k Done By the Agricul l Department 1926 27	3	1926 1927ம் வருஷங்களில் விவசாயடிபார்ட்மெண்டார் செய்த வேலையின் சாராம்சம்	3
ut	8	தென்னை	8
ean-nitrate Committee	13	சிலியன் நைட்ரேட் கமிட்டி	13
orres pondence	17	கடிதம்	17
Review	23	விமர்ஸனம்	23
Almanack	29	பஞ்சாங்கம்	24

Editor Rao Bahadur J, Chelvaranga Raiu
" Jagannadha Baugh " Saidapet.

Annual Subscription Including Postage Re. one only

CopyRight] [Registered]

New Invention !! New Invention!!

A BOON TO MOTORISTS

BRAKELASTIC

Stop that screaming noise when applying Brakes. BRAKELASTIC not only stops the nasty sound but also preserves the BRAKE LINING. Price per bottle RE. 1 only. Directions sent with every bottle. V. P. P. packing and postage extra,

J. S. R. & Co,

Sole Agents, BRAKELASTIC.

"Jaganadha Baugh" Saidapet, P. O. (MADRAS.)

புதிது! புதிது!! பு

மோட்டாரை நிறுத்துகையில் பிரேக்கில் உ... ...கும் "கீச்கீச்" என்ற சப்தத்தைப் போக்குவத... ரஸாயன முறையில் கண்டுபிடிக்கப்பட்ட பிரேக்லாஸ்டிக் என்னும் உயர்தர ஜர்மன் எண்ணெய் புட்டி ஒன்றுக்கு விலைரூபாய் 1. இதை உடனே பரீக்ஷித்து விசேஷ நன்மை பெறுங்கள். பிரேக்லைனிங் நீடித்துழைக்க இந்த எண்ணெய் வெகு பிரயோஜனமுள்ளது. உபயோக விவரம் புட்டியுடன் வரும். பாக்கிங் வி. பி. செலவுகள் பிரத்தியேகம்.

ஜெ. எஸ். ஆர். அன்ட்கோ

ஸோல் ஏஜண்டுகள், ஜெகன்னாதபாக் சைதாப்பேட்டை.

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to

Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

Vol. 11 புத்தகம் 11	விபவ ௵ சித்திரை ௴ 1௳ 1928-ம் ௵ ஏப்ரல் ௴ 13௳	பிரதி 1 NO. 1

ourselves

நாம்

விபவ ௵ சித்திரை மாதம் முதல் கிருஷிகனுக்கு பத்தாவது வயது முடிந்து 11-வது வயது ஆரம்பமாகிறது.

ஆதி முதல் "கிருஷிகன்" வாங்கி வாசித்து வந்த சந்தா நேயர்ளிற் பலர் எக்காரணத்தைக் கொண்டும் "கிருஷிகன்" பிரசுரமாது நிற்கலாகா தென்றும், எப்படியாவது நடத்தியே தீரவேண்டுமென்றும் வற்புறுத்தி வருகிறார்கள்.

நாம் ஆதிமுதலே இப்பத்திரிகையின் மூலமாய் பொருளாது, பிரக்யாதி யாவது பெறலா மென்னும் நோக்கத்துடன் பிரசுரிக்க ஆரம்பிக்க வில்லை யென்பதும் நமது சந்தா நேயர்கள் நன்குணர்வார்கள். பின் எந்த நோக்கத்துடன் "கிருஷிகன்" ஆரம்பிக்கப் பட்டதுஎன்னும் கேள்வி பிறக்கலாம்.

காலத்தின் மாறுபாடுகளுக் கேற்றவாறு சாஸ்திரீய ரீதியாய் விவசாயம் செய்தால்தான் தக்க லாப மடையக் கூடுமென்றும், பழைய வழக்கங்களையே கையாள வேண்டு மென்னும் நோக்கத்துடனிருக்கும் கிருஷிகருக்கு அம் முறைகளைக் கையாளுவதால் ஏற்படக் கூடிய லாப நஷ்டங்களை எடுத்துக் கூறி, அவர்கள் நன்மையடையும் படியான மார்க்கங்களில் தூண்ட வேண்டு மென்பதே நமது முக்கிய நோக்கம், அத்துடன் "இப்படிச் செய்தல் நலம்" "அப்படிச் செய்வது சிலாக்கியம்" என்று சுய நலங்கருதி நமக்கு உபகார மில்லாத விவசாய

க்கருவிகளையும், அநிந்திரிய வஸ்துக்களடங்கிய எருக்களையும் நமது தலையில் கொண்டு வந்து கொட்டி, நமக்கு ஜீவாதாரமான இந்திரிய வஸ்த்துக்களடங்கிய, எலும்புத்தூள், மீன் எரு, புண்ணாக்குகள் முதலியவைகளை அயல் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யாவண்ணமும் அதிலுள்ள லாப லோபங்களை பிரத்தியக்ஷண்யமாய் எடுத்துக் கூறி ஏழைக் கிருஷிகர் நஷ்டமடையா வண்ணமிருக்கும்படியும் செய்ய வேண்டுமென்பதும் எமது நோக்கம்.

தற்காலம் இருக்கும் சந்தா நேயர்களிடம் வசூலிக்கும் சந்தா, காகிதக் கிரயத்திற்கும், தபால் செலவுக்குமே குறைவு படுகிறது. எப்பாடுபட்டாவது, எவ்வளவு நஷ்டப் பட்டாவது இவ்வருஷம் முடியும் வரை கிருஷிகனை நடத்துவது திட்டம் தான். “கிருஷிகன்” ஆயுள் வளர்வது சந்தா நேயர் கையில்தான் இருக்கிறது ஏனென்றால் ஒவ்வொரு சந்தாதாரரும் தம்மாலியன்ற அளவு சந்தாதாரரைச் சேர்த்து சந்தாதார் பெருகும்படி செய்தால்தான் சுக்கில௵ பத்திரிகை பிரசுரிக்கக் கூடும். பத்திரிகை வெளிவந்தாலென்ன வராவிட்டாலென்ன என்னும் நோக்கத்துடன் சந்தா நேயர் வாளாவிருப்பின் நாமும் பத்திரிகையை நிறுத்திவிட்டு சும்மாயிருக்கும்படி நேரிடும். இவ்விஷயத்தை போதிய அளவு முன் கூட்டியே எச்சரித்து விடுகிறோமாதலால் இனி அடுத்த௵ பத்திரிகை பிரசுரமாவதும் நின்று விடுவதும் சந்தா நேயர்களாகிய உங்கள் கையில் விட்டு விட்டோம். பின்னால் நமதுபேரில் வருத்தப்படுவதில் உபகாரமிராது என்னும் விஷயத்தை மற்றுமோர் தரம் தங்கள் மனதில் பதியுமாறு தெரிவிக்கின்றோம்.

ஈஸ்வர கிருபையாலும், சந்தா நேயரின் பேராதரவினாலும் “கிருஷிகன்” என்றும் வளர்ந்தோங்குமாறு சர்வதயாபரநிதியாகிய கடவுள் அருள்புரிய வேண்டுமென்று அவரைப் பிரார்த்திக்கிறோம்.

News & Notes

குறிப்புகள்

கோயமுத்தூர் கரும்பு பண்ணையில் வேலை செய்த டாக்டர் பார்பரும், அதற்கப்பால் அவர் ஸ்தானத்திலிருக்கும் ஸ்ரீமான் ராவ்பஹதூர் வெங்கட்ராமய்யர் அவர்களும், அவர்களுடன் வேலை செய்யும் மற்ற இந்திய உத்தியோகஸ்தர்களும் நமது நாட்டுக்கரும்பு அபிவிருத்தியில் அதிக கஷ்டமெடுத்து வேலை செய்து வருகிறார்களென்பது கரும்புப் பயிரைப் பற்றி கவனம் செலுத்தும் எல்லோருக்கும் தெரியும். இன்னும் சில வருஷங்களில் இந்தியாவில் கரும்புப்பயிர் அபிவிருத்தியடையுமென நம்ப இடமிருக்கிறது.

Work done by the Agricultural Department during 1926-1927

Paddy

1926-27-ம் வருஷங்களில் விவசாய டிபார்ட்மெண்டார் செய்த வேலையின் சாராம்சம்

நெல்லில் செய்த வேலைகள்

நெல் அபிவிருத்திக்காக இந்த இராஜதானியில் 4 பண்ணைகள் த்திதாபிக்கப் பட்டிருக்கின்றன: கோயம்புத்தூரில் இராஜதானி முழுவதிலும் விளையும் நெல் தினுசுகளை பரீட்சை செய்து பார்த்து எத்தினுசுகள் மேன்பாடானதென்று நிர்ணயித்து அவைகளை அபிவிருத்திசெய்து பார்க்கும் பொருட்டு ஒருதாய் பண்ணையும், அதற்குக்கிளைப் பண்ணைகள் தஞ்சாவூர் ஜில்லாவில் ஆடுதுறையில் ஒரு பண்ணையும் குண்டூர் கோதாவரி முதலிய தெலுங்கு ஜில்லாக்களுக்காக மரூடேரு என்ற இடத்தில் ஒரு கிளைப்பண்ணையும், மலையாளம் மங்களூர் ஜில்லாக்களுக்காக பட்டாம்பியில் ஒருகிளைப் பண்ணையும் ஆகமொத்தத்தில் 4 பண்ணைகள் ஸ்தாபிதம் செய்திருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் பண்ணை

இவைகளில் தாய் பண்ணையாகிய கோயம்புத்தூர் நெல் அபிவிருத்தி பண்ணையில் இவ்வருஷத்தில் ஏக்ரா ஒன்றுக்கு 3013 இராத்தல் வீதம்தான் மாசூல் கிட்டிற்று, இது முந்திய வருஷங்களைவிட சற்று குறைச்சல் தான். இக்குறைச்சல் விளைவுக்கு முக்கிய காரணம் பயிர் கதிர் வாங்கி முத்தும் சமயத்தில் மழையில்லாமைதான். நான்கு தினுசு நெல் விதைகள் இப்பண்ணையிலிருந்து அபிவிருத்தி செய்து இப்போது விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. அவைகளாவன:—

1 ஜி பி பி 24(2, கோயம்புத்தூர் நிர் 1·(3) கோயம்புத்தூர்நிர்2·(4) கோயம்புத்தூர் 3. இவ்வருஷத்தில் 32425 ராத்தல் விதைகள் இங்கான்று கினுசுகள் இலிருந்து விவசாயிகளுக்கு விற்கப்பட்டன. அடுத்தவருஷத்தில் இன்னும் 4 புதுதினுசுகள் பரீட்சையில் திருப்திகரமாயிருப்பதினால் விவசாயிகளுக்குக் கொடுத்துப் பரவச்செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும். அவைகளாவன:—

கோயம்புத்தூர்நிர்4:—இது கோயம்புத்தூர் ஜில்லா கோபிசெட்டிபாளையத்திற்குச் சுற்றுப் பக்கத்தில் பிரயோஜனப்படும். இதுகோபி ஆனைக்கொம்பன் தினுசிலிருந்து பொருக்கி எடுத்த நெல். 100க்கு 11க்கு மேல் சாதாரண ஆனைக் கொம்பனைவிட ஜாஸ்தி மாசூல் கொடுத்திருக்கிறது.

கோயம்புத்தூர் நிர் 5:—இதுசின்னசம்பாவில் பொருக்கி எடுத்த

நெல் 100-க்கு 12 பாகம் சாதாரண தினுசைவிட ஜாஸ்திமாசூல் கொடுத்திருக்கிறது.

கோயம்புத்தூர் நீர் 6-7- இது சடைச் சம்பாவில் பொருக்கி எடுத்ததினுசு.

இதில், கோயம்புத்தூர் நீர் 6, 100க்கு5 பங்கு ஜாஸ்தியும், கோயம்புத்தூர் 7, 100க்கு மூணேகால் ஜாஸ்தியும் மாசூல் கொடுத்திருக்கிறது. இத்தினுகளில் கிடைத்த மாசூல்கள் மேலே சொன்ன மற்ற தினுசுகளைப் போல் அவ்வளவு ஜாஸ்தியாய் இல்லாவிட்டபோதிலும், இத்தினுசின் பயிர்கள் ஒரேமாதிரி ஏககாலத்தில் வளர்ந்து பழுத்து அருவடைக்கு லாயக்காகும் குணத்தை மெச்சி விவசாயிகள் இதை சிலாக்யமாகக் கருதுவார்கள் என்று எண்ணப்படுகிறது.

ஆடுதுறை பண்ணை

மூன் வருஷங்களில் விவசாயிகளுக்குக் கொடுத்த 7 தினுசு நெல் விதைகளையே இவ்வருஷத்திலும் உற்பத்தி செய்துவிவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டன. இவ்வருஷம் வேறு புதுதினுசு குடியானவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

இப்பண்ணையில் 50, 425 ராத்தல் விதைதான் உற்பத்தி செய்யக்கூடும். ஆனால், 40,000 ராத்தல் விதை தேவையிருக்கிறது. இப்பண்ணை ஸ்தாபித்த சிறிது காலத்திற்குள் இதில்உற்பத்தி செய்த நெல் தினுசுகள் மூலமாய் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லா, குடியானவர்கள்பயிர் தக்க லாபம் பெற்ற காரணத்தின் மூலமாய், ஜாஸ்தி விதை தேவையென்று மனுச்செய்யும் குடியானவர்களுக்கு எப்படி சப்ளை செய்யக் கூடுமென்ற விஷயத்தைக்குறித்து டிபார்ட்மெண்டார் யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் தஞ்சாவூர் ஜில்லாவில் ஏறக்குறைய 10,லக்ஷம் ஏக்கராக்கள் நெல் சாகுபடியில் இருந்து கொண்டிருக்கிறது.

மாடேரு பண்ணை

இதில் பண்ணைக்கு வேண்டிய கட்டங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இத்துடன் மேல் பக்கமிருக்கும் ஆற்றுப்பாசான நிலங்களுக்கு பொருத்தமான கிருஷ்ணகாட்டிகலு என்றுசொல்லும் நெல் தினுசை இவ்வருஷத்தில் மொத்தத்தில் பொருக்கி யெடுத்துக் குடிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். பக்கமுள்ள ஆற்றுப் பாசான, பிராந்தியங்களிலுள்ள கிஷிகருக்கு பசாங்கி என்னும் தினுசையும் அக்குலு, கரிக சன்னவாரி, என்னும் தினுசுகளை மத்திய பிராந்தியங்

களுக்கும், மொத்தத்தில் பொருக்கி எடுத்துக் குடிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மேல் சொன்ன தினுசுகளில் தனிச் செடியில் நெல் தினுசு பொருக்கி எடுத்து, அபிவிருத்தி செய்து கொண்டு மிருக்கிறார்கள். இவைகள் அநேகமாய் இனி 2-வருஷத்திற்குள் பிரத்தியேகப்பேர்களுடன் விவசாயிகளுக்குக் கொடுக்கப் படுமென்று நம்பப்படுகிறது.

இப்பிராந்தியங்களில் தற்காலம் பயிரிடப்படும் நெல் தாளோடி வளரும் சமயத்தில் அவைகளை அறுத்து அல்லது மாடுகளை விட்டு மேய்க்கின்ற வழக்கமிருந்து கொண்டிருக்கிறது. இவ்வழக்கத்தினால் நெல் பயிர் ஜாஸ்தி ஓங்கி வளராமலும் அறுத்துவிட்டபிற்பாடு அல்லது மேய்ந்த பிற்பாடு வழநும் பயிர் ஜாஸ்தி வளராமல் கதிர் சரியாய் விடுமென்றகருத்தைக் கொண்டு தான். இதற்குப் பதிலாக ஒரு நூதன முறை இப்பண்ணையில் பரீக்ஷிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் குருவை, ஒட்டடன் விதைகள் இரண்டையும் கலந்து நாத்துவிட்டு நட்டு அல்லது விதைத்து குருவை அறுவடை காலத்தில் ஒட்டடன் தாளையும் சேர்த்து அறுத்து அப்பால் ஒட்டடன் மாறுலையும் அனுபவிப்பதைப் போல் செய்யஎண்ணி அநேக விதநெல்களைக் கலந்து விதைத்துப் பார்த்ததில் 11ம் நீர் குருவையையும் "கிஷ்ண காட்டிகலு" அல்லது "ஆட்ரகாளா" நெல் இவைகளில் ஒன்றைகுருவையுடன் கலந்து விதைத்துப் பயிர் செய்தால் சித்தி அடையக் கூடுமென்று இதுவரை கண்டு பிடித் திருக்கிறார்கள்.

இந்தப்பண்ணைக்கு வேண்டிய நிலம் 1927ம் வருஷம் பிப்ரவரி மாதந்தான் வாங்கப்பட்டது. இப்பண்ணையில் ஒரு போகத்திற்கு லாயக்கானநெல், இருபோகத்திற்கு லாயக்கானநெல்தினுசுகள் 3 போகத்திற்கு லாயக்கான தினுசுகள், மேட்டுப்பாகங்களில் தண்ணீர் ஆதரவில்லாமல் மழையிலேயேபயிர் செய்யும் தினுசுகள், முதலியவைகளைத் தெரிந்தெடுத்துப் பரீட்சைகள் செய்ய எண்ணியிருக்கிறார்கள். இப்போது கட்டட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

மேல் சொன்ன விதை பொருக்கி எடுத்து அபிவிருத்தி செய்யும் வேலையுடன் எருசம்பந்தமான பரீட்சைகளும் உழவு முதலியவைகள் சம்மந்தமான பரீட்சைகளும் நடந்து வருகின்றன. ஆனால் இவைகளில் இன்னும் முடிவான தீர்மானங்கள் கிடைக்கவில்லை. ஒரே தினுசுப்பயிரை வெவ் வேறு பட்டங்களில் (காலங்களில்) விதைத்து பரீட்சைப் பார்த்துக் கொண்டும் வருகிறார்கள். நைட்ரேட்ஆப்சோடா என்னும்

நைட்ரஜன் அல்லது தழைசத்தைக் கொடுக்கக்கூடிய அநிந்திரிய வஸ்து எருவை தற்காலம் அநேக இடங்களில் குறைச்சலாய்க் கிடைத்துக்கொண்டு இருக்கும் இந்திரியவஸ்துக்களடங்கிய எருக்களாகிய தழை எருதொழுஎரு முதலிய எருக்களோடு கலந்து உபயோகிப்பதினால் லாபம்கிடைக்கக்கூடுமென்ற ஆராய்ச்சிகளும் பரீட்சைகளும்நடத்தப்பட்டுவருகின்றன. இவைகளிலிருந்து முடிவானதீர்மானங்கள் இன்னும் பெறமுடியாமலிருந்தாலும் இதுவரை நடத்திய பரீட்சைகளிலிருந்து கிடைத்த அநுபோகம்; நைட்ரேட் அப்சோடா என்னும் எருவை இப்படி கலந்து உபயோகிப்பதில் அதிகசிலவு பிடிக்கிறதென்றும் அதிலிருந்து கிடைக்கும்சொற்ப லாபம் அந்த எருவின் கிரயத்திலேயே முழுகிப் போகிறதென்றும் "ரிப்போர்ட்டு" சொல்லுகிறது.

இத்துடன் ஒருதினுசு விதைநெல் எத்தனை நாளைக்கு வைத்தால்கெட்டுப் போகாமலிருக்கும் என்றும் பரீட்சைகள் நடத்திக்கொண்டு வருகிறார்கள். வெவ்வேறு தினுசுமுளைக்கும் சக்தி வெவ்வேறு காலம்வரை யிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். நெல் தினுசுகளின் வேர்களைக் குறித்த ஆராய்ச்சிகளும் செய்து வரப்படுகின்றன. வெவ்வேறு தினுசு அரிசிகளை அவைகளின்வேகும் குணத்தைக் குறித்தும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

சாதாரணப்பண்ணைகளாகிய அனக்காபல்லி, சாமல்கோட்டை பாலூர் விவசாயப் பண்ணைகளிலும் நெல்லைக் குறித்த ஆராய்ச்சிகள் செய்து கொண்டு வருகிறார்கள். விசாகப்பட்டணம் ஜில்லாவில் தற்காலத்தில் நெல் பயிருக்கு எருவிடுதலில் கிருஷிகர் சரியான கவனம் செலுத்தாததினால் அங்கு கிடைக்கும் மகசூல் அதிக கம்மியாகிறதென்றறிந்து எவ்விதபசுந்தாள் எருவை எவ்வளவு அளவில் உபயோகித்தால் எவ்வளவு ஜாஸ்திலாபம் கிடைக்கக் கூடுமென்று பரீட்சை செய்யும்படி ஆராய்ச்சிகள் செய்துவருகிறார்கள். பயிரிடும் நிலங்களில் தான்ய சத்து என்று சொல்லப்பட்ட பிரகாசதாமிலம்போதுமான அளவுயிருக்கும்போது 2000 ராத்தல் சடம்பு பசுந்தாள் எருவை உபயோகித்ததில் 100க்கு 16 பங்கு ஜாஸ்தி மகசூல் கிடைக்கிறதென்று இதுவரை செய்த பரீட்சைகளில் தெரிகிறது. விசாகப்பட்டணம் ஜில்லாவில் முதல் முதல் வரும் புனசா மழைகளின் உதவியால் சுலபமாய் சாதார

ணநிலங்கள் 3வார முதல் கொண்டு 4வாரத்தில்ஒருஏக்கர் நிலத்தில் பதினையிரம் ராத்தல் பசுந்தாள் எருவு கிடைக்கக்கூடுமென்று தெரிய வருகிறது. பசுந்தாள் உபயோகித்ததின் பொருட்டு பிரகாசதாமில எருவு அதாவது தான்ய சத்துஎருஇயற்கையாய் போதுமானஅளவு ள்ள நஞ்சை நிலங்களில் 2000 ராத்தல் பசுந்தாள் எருமாத்திரம்இட்டதில் பயிர்சிலவும் பசுந்தாள்கிறையமும போக ஏக்கருக்கு ரூ 31- 12- 3 ஜாஸ்திலாபம் கிடைத்திருக்கிறது.

சாமல் கோட்டா விவசாயப் பண்ணையில் கோயம்புத்தூரில் நெல் அபிவிருத்தி பண்ணையில் பொருக்கி எடுத்த நெல்லையும் சாமல் கோட்டையில் பொருக்கி எடுத்த நெல்லையும் பயிர்செய்து ஒப்பிட்டுப் பார்த்ததில் "கேரிக்க சன்னவாரி" நெல்தினுசும "புனுசாஆட்ராகாளா"நெல் தினுசும் சிலாக்கியமானவைகளென்று முடிவான தீர்மானத்திற்கு வந்துவிட்டார்கள். பாலூர் விவசாயப் பண்ணையில் கிணற்றிறவையில் சம்பாத் தினுசுகளும், குறுவை தினுசுகளும் பயிர்செய்து கொண்டுவருகிறார்கள். இவைகளில் சிலதினுசுகள் சிலாக்கியமாயிருப்பதாக அறிகிறார்கள். (தொடரும்)

News &Notes-குறிப்புகள்

1927ம் வரு ஆகஸ்டு மாதம் பிரசுரம் ஆன இண்டஸ்டிரியல் கெமிஸ்ட் என்னும் பத்திரிகையில் இங்கிலாந்தில் நைட்ராஜன் எரு (தழை) சத்தைக் கொடுக்கக்கூடிய அமோனியம் சல்பேட் முதலிய எருக்களை உற்பத்தி செய்ய ஒரு பெரிய சாலை மல்லிங்காம் என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும், அது நாள் ஒன்றுக்கு 250 டன் (1டன் 2240 ராத்தல்) அம்மோனியம் ஸல்பேட் செய்யக்கூடுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இனி இங்கிலாந்து தேசத்தார் இந்தியா முதலிய மற்ற தேசங்களிலிருந்து புண்ணாக்கு எரு முதலிய இந்திரிய சத்து உள்ள எருக்களை ஏற்றுமதி செய்ய வேண்டிய அவசியமே இல்லையென்று நினைக்க வேண்டியிருக்கின்றது. மேற் சொன்ன அங்கிரிய சத்துள்ள எருக்களை மேல் நாட்டார் தங்கள் தேசத்திலேயே வைத்துக் கொண்டு நமது தேசத்தில் கிடைக்கும் எலும்பு, மீன், எரு, புண்ணாக்கு போன்ற எருக்களை ஏற்றுமதி செய்யாமலிருப்பார்களானல் அது நம்முடைய அதிர்ஷ்டகாலமென்றேசொல்லலாம் நம்முடைய விவசாயமும் முன்னுக்கு வரும்.அப்படிச் செய்யாது அங்கு உற்பத்தி செய்யும் அங்கிரிய சத்துள்ள எருக்களை இப்போதைய விலையைவிட குறைந்த விலைக்கு நமக்கு விற்று விட்டு, நமது இந்திரிய வஸ்துக்களடங்கிய எருக்களை இப்போதைய விலையைவிட அதிக விலைக்கு வாங்கிக் கொண்டு போனல் நமக்கு கெட்ட காலமென்றே நினைக்க வேண்டும்.

COCONUT.

Continued from page 294 of Vol. X No. 12.

தென்னை.

10-ம் வால்யம். 12-ம் நம்பர் 294-ம் பக்கத் தொடர்ச்சி.

*கோதாவரி ஜில்லாமுதலிய பிரதேசங்களில் 3-4வருடம் சென்ற முத்திய கண் பேத்து நடுவது விர்த்தியா யுண்டாகுமா வென்று நேயர்கள் ஐயுறக்கூடும். அங்கங்கே நிகழும் விஷயமறிந்தே தெரிவித்தோம். வாஸ்தவந்தானு வென்றையுறுவோர் விவசாய இலாகா மூலம் தெரிந்து தெளிந்தனுபோகஞ் செய்வது சாலவும் நன்று. பதியம் பேத்து நடவு கண் மதாளித்து வளராமல் குறுகி வளர்ந்து சரியான காய்ப்புண்டாவது திண்ணம்.

கண் பதிகம் போடக் கருதுவோர் மணல் ஜாஸ்தியான புலபுலத்த மண்ணில் பதிகம் போடுவது பதிகக் கண் சுலபமாய்ப் பேர்க்க வசதியாயிருக்கும். பதிகம் உண்டாகும் வரை வருடந்தோறும் 2 ராத்தல் புண்ணாக்கும் 3 பவுண் சாம்பல் போடுவதால் கண் புஷ்டியா யுண்டாகும். அல்லது 1 பவுண் மீன் உரமும் 3 பவுண் சாம்பலும் போடலாம்.

கண் பேக்கும்போது கண் தூரடி வேர், பின்னமாம்படி செருக்கி வெட்டப்படாது. வேரை வெட்டினால் கண் மலைத்துண்டாகா. கண் தூரிலிருந்து ஒன்றரை கஜத்துக்கப்பால் கண்ணைச் சுற்றி ஒன்றரை அடி அகலம் ஒன்றரை அடி ஆழம் கால்வெட்டி விடவேண்டும்: அந்தக் காலடி மட்டத்தில் 3-4 கஜ நீளமும் 3 அங்குலங் குருக்களவுள்ள கம்பு முனை கூர்மையாய்ச் சீவி அந்த மாதிரி 2-3 கம்பு வைத்து கண் பேக்கவே கண் சுலபமாய்ப்பேறும். வேர்ஜாஸ்தி பின்னப்படாது. அந்த வேரையும் சீவி வெட்டாமல் கண் வைக்க வேண்டிய இடத்தில் கொண்டு போய் வைத்து பதித்து மண் தள்ளி கெட்டித்து 3-4 மாதம் 4 நாளைக்கோர்தபா ஜலம் வார்த்து வரவே 6 மாதத்தில் வேர்விட்டு குருத்துவிடத் துவக்கும். 1 வருடம் வரை ஜலப்பாசனங்குறைபாதிருக்க பதிகக்கண் வளமாயுண்டாகும். நெல் நாத்து பதிகம் போட்டு நடவு செய்வதில் வைக்கோல் குன்றி மேனிருசி பதிகங்காண்பதை நேயர்களறிவர். அவ்வாறே தென்னை வளர்ந்து தக்க பலனுமென்று கருத வேண்டியது. தென்னை பதிகம் பேத்து நடவில் உண்டாமென்பதை சில திருஷ்டாந்தங்கள் கூறி மேற் செல்வாம். பதிகக்கண்நடவு வானம் மப்பும் மந்தாரமாயிருக்கும் காலம் அனுசரிப்பதவசியம்.

*முன் சஞ்சிகை 274ம் பக்கம் 2ம் பாரா பார்க்க,

மேல்சமுத்திரக்கரை வடபாகம் கோவாவில், தென்னைகள் வளராமல் குட்டை ஜாதி போன்று 7-8 கஜ உயரத்துக்கு மேலில்லை. காய்ப்பு ஜாஸ்தி. அங்கே போய் வந்த கிருஷிகன் சந்தாதார் திருநெல்வேலி ஜில்லா சங்கரநயினர்கோவில் தாலூக்கா சேர்ந்தமரம் ஸ்ரீமான், கே. வி பிருன்சிஸ் சேவியர் விசாரணையில் பதிகம் போட்டதைக் கண்ணோ அங்கே நடவென்றும், காற்று பாதை கொடுமைக்காகப் பதிகம் போடும் முறையை அனுசரித்தொழுகுவதாக வெளியாயிற்றென்றறிவிக்கிறார். பதிகம் போடுவதாலுள்ள பயன் தெரிந்த பின்பேனும், நேயர்களனுஷ்டிக்கத் தயங்கப்படாது. ஸ்ரீமான். கே. வி. பிருன்சிஸ் சேவியர் திருவாங்கூர் ராஜ்ஜியம் பூராசுற்றி தென்னை யனுபவம் அறிந்துள்ளார். கோதாவரி ஜில்லா அனந்தபூர் ஜில்லா முதலிய விடங்களில் தென்னைப் பதிகம் போட்ட விருத்தியைப் பார்த்து தெளியக் கருதியுள்ளார். (முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை யின்மைபுகுத்திவிடும்) என்ற வள்ளுவர் வாக்குக் கிணங்கி நடப்பது சிலாக்கித்தற்குரியது.

சேர்ந்தமரம் புஞ்செய் செம்மண் பாகம் சில. நத்த கூறு சாம்பல் (ப்ரௌன் கலருன சாம்பலும் செம்மண் கலந்த நிறமுள்ளது) மண் ஜாஸ்தியா யிருக்கிறது. கிணற்றிறவை சாகுபடி மிகுதியும் ஜனவாழ்க்கைக் குரியது. கமலைக் கிடங்கு நிழலுக்காக 3-4-5 பூவரசமரம் கிணர்தோறும் 30 வருடத்துக்கு முன்னிருந்தது. இப்போ பூவரசழிந்து அந்த மரம் நின்ற இடங்களும்,பக்க நிலமுந் தென்னஞ் சோலையா யிருக்கிறது. கிராம மொத்தம் 12 ஆயிரம் தென்னை யுண்டு. கலக்க தென்னை வைத்திருந்தால் சரியான காய்ப்பிருக்கும். இதன் விருத்திக்கு தூண்டுகோலாய் நின்றவர் ஸ்ரீமான் கே. வி. பிருன்சிஸ் சேவியர் முயற்சியே காரணமென்று விசிதமா யறிந்தோம். அன்னார் பிதா கிணற்றடி பூவரசிழக்கக்கூடாதென்று ஆட்சேபித்தார். ஸ்ரீமான் சேவியர் சமாதானங் கூறிவிருத்தியை நிலைப்பிவித்து எல்லா விவசாயிகளையும் அனுசரிக்கச் செய்தார். இவர் போன்று கிராமந்தோறும் 2-1 விவசாயி தோன்றுவார்களானல் இந்திய கிருஷி அபிவிருத்தியாக ரெம்பநாளாக மாட்டாது. ஸ்ரீமான் சேவியர் ஊக்கம் தளரா முயற்சி மேம்பாடு அழவிடற்பாலதன்று. மேலும் அன்னார் செய்கையைக் கூர்ந்து நோக்கினல் * (தாளாண்மை யென்னுந்தகைமைக் கட்ட

பதவுரை பொருள்.

* முயற்சி யென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின் கணணே நிலை பெற்றது. எல்லாருக்கும் உபகாரம் செய்தலென்னும் மேம்பாடு,

ங்கிற்றே வேளாண்மையென் றுஞ் செருக்கு)† (முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கிறை என்று வைக்கப்படும்.)

என்ற வள்ளுவர் மொழிக்கிலக்கா யொழுகி ஜனங்களை யவலம்பிக்கும்படி செய்யும் முயற்சி மகிழ்தற்குரியது.

ஸ்ரீமான். கே. வி. பிரான்சிஸ் சேவியர் சொந்தத்தில் 3 ஆயிரந் தென்னை வைத்திருக்கிறார். அதில் ஆறில் ஒரு பாகம் காய்ப்புக்கு வந்து விட்டது. பாக்கி 4-5 வருடத்தில் காய்ப்புக்கு வரும். பூமி தென்னைக் கேற்ற ஸ்தலமே. காய்க்கிற தென்னைகள் வருடம் 1க்கு மரம் 1க்குசராசரி 50-60 காய் வீதந்தேரும். உரமிடுவதானால்மரம் 1க்கு 100 130 தேங்காய் காய்த்து பரிப்பது திண்ணம். சிலோன் சிங்கப்பூர் திருவனந்தபுரம் முதலிய இடங்களிலிருந்து உயர்ந்த ஜாதி தென்னை வருத்தி விருத்தியா யிருக்கிறது. புஞ்செயில் தென்னை யுண்டாகவே மாட்டாதென் றையுறுவோர் இந்த கிரமம் பார்த்து தெளிந்து தென்னை விருத்தி செய்வார்களாக. 700 ஒட்டுமா மரம் வைக்கப்பட்டிருக்கிறது. பாக்கி3 வருடத்தில் பலனுக்குவரும். விசேஷகாய்ப்புண்டாகமாட்டாது. மா ஜாதி தெரியும்படி ரெஜிஸ்டர் புக்கில்லாதது பரிதாபம். பூமி 5-6 அடி மண் கண்டமும் அதன்கீழ் காக்காய் சரளாகவிருக்கிறது. காக்காய் சரள் மாவுக்குகந்ததன்று. மேலும் ஒட்டுமாவேர் பூமிமேற் பரப்பில் படரும். மாங்கண் மாதிரி ஆணிவேர் ஆழத்தில் போகும் இயல்புபோல் ஒட்டுமா வேர் கீள் மண்ணில் செல்லமாட்டாது; ஒட்டுமா கன்றை தொட்டியில் வைக்கும் முன்னமேயே மாமர வேர்களைத் துண்டிப்பதே மிகுதி வளக்க மாதலால் ஆணிவேர் பாயா. 2 2½ அடிக்கி கீழ் இழக்கமான செஞ்சரளாவது சுக்கான் சரளாவது இருந்தால் மட்டும் சரியான பலனுக்கு வரும். இங்கே பின் கண் பதிக்கு முன் 2 அடி ஆழத்திக்குக் கீழாக 1 அடி உயரம் சுக்கான் கல்ப்போடுவது காய்ப்பதிகரிக்கும். 300கிச்சிலி இளுமிச்சு வைக்கப்பட்டிருக்கிறது. சுமாரான காய்ப்புக்கு வரும். ஆப்பிள், பிளம்ஸ், பீச்சஸ, சாப்போடில்லா, மங்குஸ்தான், வானில்லா, முதலிய தினிசுகளிருக்கின்றன; கண் செழிப்பாயில்லை. மலைப்பிரதேசமுள்ள மண் வளமும் சீதோஷ்ணமும் நாட்டிலில்லாததால் விருத்தியாகமாட்டாது. அந்த மரப்பக்கம், தூங்குமூஞ்சி (மழைமரம் சீமைவாகை) மரம் வைக்கில்

‡ தான் முறை செய்து பிறர் நலியாமல் காத்தலைச் செய்யுமரசன்மகளேயாயினும் மக்களுட் கடவுளென்றெண்ணற் குரியர்.

அந்த *நிழலில் விசேஷ தினுசு பலிதமாகலாம். சீமை அத்திப் பழம் மாதனை, விருத்தி செய்யவில்லை அனந்தப்பூர் ஜில்லா பெனுகொண்டா, மதுரை ஜில்லா மெக்கேல்பட்டி, திருட்சை, அத்திக்கு பேர் போனது. திருச்சிராப்பள்ளி மாதனைக்குப் பேர் பெற்றது. அதை நேயர் பார்த்து ஆதரிப்பாருக. முந்திரிமரம் (அண்டிமா) பிலாமரம் விருத்தியும் அவசியம். 30-35 ஏக்கர் நிலம் 4-5 தோட்டமாக விருக்கிறது அதில் சிங்காரத் தோட்டத்தில் வசிக்க உல்லாச பங்களாவும், மலை மாதிரி கட்டி, மாதா வைத்திருப்பது கிருஸ்தவமதப்பற்று ஸ்ரீமான் பிரான்சிஸ் சேவியர் பக்தி மெச்சுதற்குரியது. அதில் வைத்திருக்கிற மாதா சிலை வார்த்து பெல்ஜியத்திலிருந்து வர 400 ரூபாய் வரை சென்றதாம். எல்லா மரத்துக்கும் கிணற்றிலவை ஜலம் வாடாமல் பார்க்கப்படுகிறது.

6-7 கஜ உயரம் வளர்ந்த தென்னைவேர் மேல் மண்ணில் நின்று காற்றால் சாய்வதுண்டு. அவைகளை நிருத்தி 4 பக்கமும் முளையடித்து கயறு கட்டி மரத்திலும் சேர்த்து பெலப்படுத்தி 5-6 மாதம் ஜலம் வார்க்கவே மரம் தழுத்ததை யரிவோம். மரம் சாய்ந்து விட்டதென்று முயற்சி செய்யாதிருக்கப்படாது. வேர் சாய்ந்த பூமியில் முக்கால் கஜம் கிடங்கு தணித்து தென்னையை நிலைநிருத்தி மணல் போடவும்பட்டது. சந்தேகிக்க வேண்டாம்.

சில சமையம் வீட்டுக்குக் கெடுதியாகத் தென்னை நின்று, மட்டை தேங்காய் விழுந்து ஓடுகட்டடி சேதமாவது முண்டு. அப்போ அந்த தென்னை எந்த பக்கம் சாய்ந்தால் வீட்டுக்கு கெடுதியிருதென்பதை நிதானித்து குருத்து மட்டையுள்பட 5-6 மட்டைகளைச் சேர்த்து அதில் வீட்டு உரி மாதிரி கயிறுகளால் செய்து உரிமத்தியில் 3-4 தேங்காய் கனமவ்வளவு கல்லேத்தி தொங்க விடவே 6 மாதத்தில் வீட்டுக்கு கெடுதியில்லாத பக்கங் குருத்து சாய்ந்து கெடுதி மாரிவிடும்.

சில சமயம் வீட்டு சுவரில் தென்னை உராய்ந்து சுவரை பேக்கும் நிலைமை சம்பவிப்பதுண்டு. அப்போ தென்னை 1 பாதியில் 1 கெஜ நீளம் 1 கெஜ ஆழம், 2 அடி அகலம், கிடங்கு வெட்டி மண் வெளியாக்கி மண்ணிலும் சுக்கான் கல்லுளும் போட்டு மரத்தை வேண்டிய சவுகரியப்படி சாய்த்து முளை யடித்து கயறால் மரம் சாயவிடாமல் பெலமாய்க் கட்டி 6 மாதம் ஜலம் வார்த்து வரவே, மரந்தழுத்து கெடுதி நீங்கும். இவைகளை சந்தேகிப்போர் நேரில் வந்தால் மரங்களைக் காட்டப்படும்

* தாங்குமூஞ்சி மரம் நிழல தருவதுண்மையாயினும் வேர் எங்கும் பாவுமாதலால் அதன் நிழலில் வேறு தினுசுகள் பலன் தராது ப. ர.

இத்தியாதி வேதுக்களால் தென்னையில் பதிகம் போட்ட கண் சிரத்தையாய்ப் பாது காத்தா லுண்டாகுமென்று யறிந்து கொள்ளலாம்.

அனந்தப்பூர் ஜில்லா மடக்கசிரு தாலூகா, சில கிருமங்களில் 3 அடி ஆழங்குழி வெட்டி குழி யடியில் 1 அடி உயரம் கூழாங் கல்போட்டு கண் பதிப்பர். அடியில் கூழாங்கல் போடுவதால் நல்ல காப்புண்டாகிறதாம். அடியில் கல் * போடுவதில் கண்ணடியில் நீர் தங்காது. வடிகால் வசதியில்லாத நிலமாகில் அந்த தாழ்வுமாரி திருத்தமாயமையும், கண்ணடியில் காற்றுலாவுவது கண் வளர்த்திக் கனுகூலமேயாம். கூழாங்கல்லுக்குப் பதில் சுக்கான் கல் போடுவது மரவேரிலுண்டாகும் புளிப்பு திருவகுத்தால் சுக்கான் கல் இழகி உணவாகி மரம் செழிப்பாயுண்டாகும். சமயம் நேர்ந்தபோதெல்லாம் தோட்ட கிருஷிகரனுசரிப்பது தக்க பயன்றரும்-

நக்கவாரி தென்னை எல்லா நிலத்திலும் உண்டாய் விடாது. வண்டல் நிலத்தில் சிரேஷ்டமா யுண்டாகும். சாதாரண நிலத்தில் வாழை, கரும்புக் குரமிடுவது போல் ஜாஸ்தி உரமிடல் வெட்டல் ஜலப்பாச்சலிருந்தால் மட்டும் உண்டாகும். தக்க பருவஞ் செய்யாதவரை செழிப்பான காய்ப்பிருாது.

மேற்கு கரைப் பிரதேசங்களிலும் கோதாவிரி ஜில்லாவிலும் நல்ல ஜாதி மரம் தலைப்பாருமானல், தென்னை தலை உச்சி மட்டை அடிக்குக் கீழாக, 4 புறமும், அடி உயரம் தண்டில் தோடு செதுக்கி சாணங்களி மண்கலந்து ஜலத்தில் கரைத்து வைக்கோல் பிரியை நனைத்து தண்டில் அரை அடி கனம் சுத்துவர் தென்னை தலைமட்டை இடைவெளியில் பானை வைத்து அந்தப் பானைதூரில் சிருதமர் செய்து பானையில் ஜலம் விட்டு ஒழுகச் செய்வர். ஜலம் சிலவாகுந்தோறும் கப்பி போட்டு ஜலம் ஏற்றி பானையை ரெப்புவர். 3-4 மாதத்தில் சுற்றிய வைக்கல் பிரிக்கு கீழே வேர் வெளியே தெரியும். தென்னை தண்டில் எங்கே வடு செய்தாலும் அங்கே வேருண்டாய் விடும். வேர் தெரிந்தவுடன் வைக்கோல் பிரிக்கு கீழ் தண்டை வெட்டி விடுவர். தென்னை தலைக்கு 4 புறமும் கம்பு நட்டு அதில் கப்பி போட்டு கயிறு போட்டு அந்தக் கயிற்றைத் தென்னை தலையிலும் இணைத்து மெதுவா யிறக்கி குளிகளில் வைத்து ஜலம் வார்த்து வரவே 3-4 மாதத்தில் குருத்துவிட்டு 2-3 வருடத்தில் காய்க்க ஆரம்பித்து இளமரம் போலிருக்கும். மற்ற ஜில்லா வாசிகளுக்கு ஆச்சரியமாயிருக்கும். பழகினல் சுலபமாய் விடும்.

*சஞ்சிகை 218ம் பக்கம் அடிக்குறிப்பை நோக்குக

சிலோனில் 4 அடி சதுரம் 3 அடி தணிவில் கிடங்கு வெட்டி அந்த மண்ணைப் பக்கநிலத்தில் பரப்பிவிடுவர். கிடங்கு 6 மாதம் காற்றாறும். மத்யகாலம் காட்டு தளை (கப்பட்டி தளை என்பர் காட்டில் ஏதேஷ்டமா யுண்டாகும். இலை மரவள்ளி இலைபோல் 5 கவருண்டு புஷ்பம் செகப்பு வெள்ளை 2 தினுசுண்டு. ஊமத்தம்பூபோல் குளாய் வடிவமானது. கிளை 5-6 அடி நீண்டு 10-15 கிளையுண்டு. சுண்டைக் காய்ப் பிஞ்சவ்வளவு காயுண்டு) கொண்டு வந்து 2 3 தபா போட்டுமடிக்கச் செய்வர். அதன் மேல் வெளியே யிருந்து 1:2 வண்டி செம்மண் கொண்டு வந்து போட்டுக் கிடங்கில் 1 அடி உயரம் பாக்கியாம்படி நிரத்தி கண் நடுவர். கண் நட்டு 1, 2 வருடத்தில் கண் வளருந்தோறும் சன்னஞ் சன்னமாய் செம்மண் போட்டு ரெப்புவர். கண் ஆழமாய்ப் பதிப்பது கோடைகால உஷ்ணம் பாதியாது. காற்று பாதையைத் தடுக்கும். கண் நட்ட மறுவருட முதல் மடித்த மாட்டெருவுந் தளைகளுங்கலந்து உரமிட்டாகிறது. கிடங்கு வெட்டிய மண் பயனற்றது. விலக்கி வேறு செம்மண் போட்டு நிறப்புவது சிரேஷ்டமென்று சிலோனிலனுசரிப்பதை இந்தியாவிலாதரிக்க வேண்டியதவசியம் இளங்கண்புஷ்டியாயுண்டானல் மட்டும் பின்னல் மரம் காத்திரமாயுண்டாகவேதுவாகும்

இன்னும்வரும் வே. ய. திருமலையப்பமுதலியார்.

Chilean Nitrate Comittee.

சிலியன் நைட்ரேட் கமிட்டி.

சிலியன் நைட்ரேட் கமிட்டியாரின் இந்திய கிளை ஆபீஸ் கல்கத்தாவில் 1914-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலையாபீஸ் "லண்டன்" நகரத்திலிருக்கிறது. இதன் பிரிவுஆபீஸ்கள் உலகமெங்கும் 30-35 தேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

2. சிலியன் நைட்ரேட் கமிட்டியார் வியாபாரம் செய்யப்பட்டவர்களல்லர். நைட்ரேட் ஆப் ஸோடாவை இறக்குமதி செய்வதும் விற்பனை செய்வதும் அவர்கள் தொழிலல்ல. இந்திய, விவசாயிகளுக்கு நைட்ரேட் ஆப் சோடாவை உபயோகிக்கும் விதம், காலம், அளவு முதலியவைகளைப்பற்றி பிரசாரம் செய்வதும், என்ன பயிர்களுக்கு, என்ன உரங்களுடன், என்ன சமயங்களில், உபயோகப்படுத்தினல் லாபகரமான மாசூல்தரும் என்பதை தெரிவிப்பதும் அவர்கள் கடமையாகும். இத்தகையான காரியங்களைச்செய்ய கமிட்டியார் பிரதிநிதிகளை தேசமெங்கும் ஆங்காங்கு நியமித்திருக்கிறார்கள். அவர்களில்ஆங்கிலேயர்க

ளும் இந்தியர்களுமிருக்கிறார்கள். அவர்கள் விவசாய சாஸ்திர முறைப்படி ஜனங்களுக்கு சமாசாரங்களை எடுத்துச்சொல்லக் கூடியவர்கள். அவர்கள் சுமார் 14-வருஷக்காலமாக இம்மாதிரியான பிரசாரத்தை நடத்தி வருவதினாலும் அதற்கேற்றபடி அவர்களுடைய அனுபோகங்களும் விருத்தியடைந்ததினாலும் விவசாயிகளுக்கு எருவிடும் முறைகளையும் சாகுபடி செய்யும் முறைகளையும் தெரிவிக்க சக்தியுள்ளவர்கள். இம்மாதிரி பிரசாரம் மற்ற தேசங்களிலும் நடந்து வருவதால் ஜனங்கள் நைட்ரேட் ஆப் சோடாவின் குணத்தை நன்குணர்ந்திருக்கிறார்கள். அதன் உபயோகமும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டேவருகிறது. உலகமெங்கும் செலவாகிற நைட்ரேட் ஆப் ஸோடாவின் அளவு 20 லக்ஷம் டன்னுக்குமேல் செலவாவதாகக் கணக்கிடப்படுகிறது.

சிலியன் நைட்ரேட் கமிட்டியார் நைட்ரேட் ஆப் சோடாவை மாத்திரம் எப்போதும் எல்லாப் பயிர்களுக்கும் உபயோகப்படுத்தும்படி சொல்லுவதில்லை. தொழு எருக்களும், பசுந்தாள் எருக்களும், நிலத்தின் சுவபாவத்தையும், வளத்தையும், விருத்தி செய்கிறதென்பது தெரிந்த விஷயமே. * ஆனால் அவைகள் வெகுவாயும் சுலபமாகவும் கிடைப்பது அரிதாய் விட்டது. ஆடுமாடுகளின் மேய்ச்சலுக்கு மேய்கால்கள் போதுமான அளவு கிராமங்களில் கிடையாது. அடிக்கடி நேரும் வியாதிகளால் கால் நடைகள் நஷ்டமடைந்து வருகின்றன. பஞ்சங்களும் அடிக்கடி நேரிடுவதினால் விவசாயிகளுக்கு விளைவு குறைவதுமன்றி, மாடுகளுக்கும் மேய்ச்சலும் வைக்கோலும் கிடைப்பதில்லை. இக்காரணங்களைக் கொண்டு விவசாயிகள் தங்கள் பயிர் வேலைகளுக்கு மாத்திரம் வேண்டிய மாடுகளை வைத்துக் கொண்டு உபயோகமில்லாத மற்றமாடுகளை அடிமாட்டுக்காரர்களுக்கு விற்பனை செய்து விடுகிறார்கள். இதற்கத்தாட்சி நமது தேசத்திலிருந்து வருஷந்தோறும் லக்ஷக் கணக்கான கால் நடைகளின் தோல்களை வியாபாரிகள் வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்வதுதான். † பசுந்தாள் எருக்களும் கிடைப்பதும் கஷ்

* தற்காலத்தில் ஆடுமாடுகளின் சாணி மூத்திரம் முதலியவைகள் சரியானபடி சேகரிக்கப்படாததாலும் சேகரித்த சாணியையும் எருவாகத்தட்டி எரிப்பதாலுமே குறைவு ஏற்படுகிறது. இவ்விஷயத்தில் கவனம் செலுத்துதல் மிகவும் அவசியம். ப. ர்.

† பயிர் அறுவடை செய்தபின் நிலத்தில் பதமிருந்தால் பசுந்தாள் எரு விதைகளை விதைத்து ஒன்றிரண்டுசால் உழுதுவிட்டால் விதைத்த அந்த நிலத்திற்குமட்டுமேயல்ல, வேறு நிலங்களுக்கும் அப்பசுந்தாள் எரு போதுமானதாயிருக்கும். ப. ர்.

டமாகிவிட்டது. கவர்ன்மென்டார் அநேக காடுகளை குடிகளுக்கும் இன்னும் மற்றவர்களுக்கும் சாகுபடி செய்வதற்காக விட்டுக்கொண்டு வருவதால் காடுகளின் விஸ்தீர்ணம் குறைந்து விட்டது. அப்படி அவைகள் கிடைத்து உபயோகப்படுத்தப் பட்டபோதிலும் விவசாயிகளுக்குள்ள நில விஸ்தீர்ணத்திற்கு மொத்தமும், அவைகளை உபயோகப்படுத்தக்கூடிய அளவு கிடைப்பது கஷ்டம். ஆதலால் அவைகள் கிடைத்த வரையில், நிலவளம் கெடாதபடி பிரதி நிலத்திற்குக் கொஞ்சம் திட்டம் உபயோகப்படுத்துவதும், மிகுதியை பயிர்களுக்கு உணவாகக் கூடிய ‡நைட்ரேட் ஆப் ஸோடாவைப் போன்ற சாஸ்திரீய நைட்ரஜன் உரங்களுடன் உபயோகப்படுத்துவதால் பயிர் விளைவுகள் அதிகமாகின்றன. இவைகளுடன் சேர்ந்து எலும்புத்தூள் முதலிய பாஸ்பாடிக் (Phosphotic) உரங்களையும் கையாண்டால் இன்னும் சிலாக்கியமான விளைவுகள் உற்பத்தியாகின்றன.

இந்தியாவில் இக்கமிட்டியாரின் பிரசாரம் கல்கத்தாவிலுள்ள கலையாபீஸின் கீழ் நடந்து வருகிறது. அங்கு மண் பரிசைசெய்ய நிபுணர்களும் பரிசைசாலையு மிருக்கிறது. அச்சாலையில் பெரிய நிலசுவான்தார்களுடைய பூமிகளின் மண் பரிசோதனைகள் இனமாய் செய்யப்பட்டு அதற்கேற்ற சேர்க்கை உரங்களும் சிபார்சுசெய்யப்படுகிறது. அநேக தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டக்காரர்கள் கமிட்டியார் புரியும் இத்தகைய உபயோககரமான உதவியை, யேற்றுக் கொண்டு லாபமும் அடைகிறார்கள். சிரிய விவசாயிகளுக்கும், அவர்களுடைய நிலங்களை பிரதிநிதிகள் நேருகப்பார்வையிட்டு ¶ரசாயனமுறைப்படி மண் சோதனைசெய்து நிலத்திற்குத தக்கபடியும் பயிருக்குத்தக்கபடியும் சேர்க்கைஉரங்களை விவரமாக தெரிவித்துஉரங்களை உபயோகிக்கும்விதங்களையும்காண்பித்துவேண்டிய ஒத்தாசை செய்யத் தயாருகயிருக்கிறார்கள்.

---

‡ நைட்ரேட ஆபசோடாவின் ஓர் அளவு விலைக்கு கிடைக்கக்கூடிய தளைச்சத்தை இதர எருக்களுடன் உபயோகித்துக்காட்டி நைட்ரேட் ஆப் சோடாவில் அதிக இலாபம் கிடைக்கிறதென்று பரீட்சார்த்தமாய் நிரூபித்துக் காட்டினுல் அப்போசு விவசாயிகள் சந்தோஷமாய்க் கையாளமுன் வருவர். ய. ர.

¶ நமது இராஜதானியில் அநேக இடங்களில் ஒரேவயலில் ரசாயனக் கூறுபாட்டில் மண் இயல்பு வித்யாசபபடுவதாகவும், இக்காரணத்தால் ரசாயனக் கூறுபாட்டின்படியில தக்க எரு ஒரு இடத்திற்கு திட்டமாய் சிபார்சு செய்வதில கஷ்ட மேற்படுவதாகவும் அநேக சந்தர்ப்பங்களில் நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இவ்வாறுசெய்வதற்குயாதொரு செலவுமில்லாமல் இனாமாகவேசெய்யப்படும் இக்கமிட்டியாரும் அவர்களின்பிரதிநிதிகளும் பலவிடங்களில் பலவிதபயிர்களின் பேரில், நடத்திய பரிசோதனைகளின் பலன்களையும் நைட்ரேட்ஸோடாவின் பிரயோஜனத்தையும் அனுகூலத்தையும் பிரசித்தம் செய்வதோடு பலவிதப் பயிர்களை பயிரிடும் முறைகளைப்பற்றி பல தேச பாஷைகளில் பத்திரிக்கைகளை அச்சிட்டு வேண்டியவர்களுக்கு இனாமாய் அனுப்புகிறார்கள்.

இக்கமிட்டியார் கவர்ன்மெண்டு விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களோடும் கோவாப்பரேட்டிவ் இலாகா உத்தியோகஸ்தர்களோடும் ஒத்துழைத்துக்கொண்டு வருகிறார்கள். பலவிடங்களில் விவசாயிகளாலும் மாகாண விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களாலும் நடத்தப்பட்ட பரிசோதனைகளினால் நைட்ரேட்ஸோடாவை எல்லாப் பயிர்களுக்கும் கிரமப்படி ஜாக்கிரதையாக உபயோகப்படுத்தினால் லாபகரமான மாசூல் கிடைக்கிறதென்று தெரியவருகிறது. கமிட்டியார் பிரசித்தம் செய்யும் பத்திரிகைகளில் குறித்திருக்கும் எருவிடும் முறைகள் அநேகமாக கவர்ன்மெண்டு விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களுடையவும் கமிட்டியாருடையவும், அநேக விவசாயிகளுடையவும் அனுபோகங்களையொட்டி எழுதப்பட்டவைகள் தான். *ஆகையால் விவசாயிகள் தங்கள் அனுபோகத்திலிருக்கும் முறைகளுக்கு இவைகளையும் உதவியாகச் செய்து கொண்டு பயிரிட்டால் நல்ல லாபமடைவார்கள்.

எ, கிருஷ்ணசாமி,
ஏஜன்ட், சில்லியன் நைட்ரேட் கமிட்டி.

*நமது இராஜதானியில் பலஜில்லாக்களிலும் கிராமங்களிலுமுள்ள மண் வழும சீதோஷ்ணபேதம் மழையளவு விலைவித்தியாசம்போன்றவைகளையொட்டி ஒரு இடத்தில் கிடைத்தபலன் மற்ற இடத்தில் கிடைக்கிறதில்லையென்ற அனுபவத்தை இப்பத்திரிக்கையில் பலமுறை எழுதியிருக்கிறோம். ஆகையால் அவரவர்கள் நிலத்தில் ஒரு பாகத்தில் போட்டுப் பார்த்து அனுபவித்த சீர்திருத்தத்தைக் கையாளவேண்டும். சொர்ப்ப இடத்தில் போட்டுப் பரீட்சை பார்க்கிறதற்குமுன் விவசாய டிபார்டுமெண்டார் அந்த ஜில்லாவிலுள்ள பண்ணையில் பரிசோதித்து சித்தியடைந்து சிபார்சு செய்த பின் தான் சிறிது பாகத்தில்கூட பரீட்சிக்கமுயல வேண்டும். நமது இராஜதானியிலிருக்கும் சர்க்கார் விவசாயப் பண்ணைகளில் இந்த எருவை எந்தப்பயிருக்குப் போட்டுப்பார்த்து எருவின் விலைக்குமேல் அதிக இலாபம் எவ்வளவு ஆகப்பட்டதென்ற விபரத்தை வெளியிடுவது நலம். (ப, ர.)

CORRESPONDENCE

கடிதம்

கனம் பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு

ஐயா, கீழ்கண்ட விஷயங்களுக்கு தயவு செய்து பதிலளிக்கக் கோருகிறேன்.—

1. வாழைப் பயிருக்கு எந்தெந்த (சத்து) பயிருணவு எவ்வளவு பிரமாணத்தில் வேண்டுமென்பதைப் பற்றி தங்கள் சிபார்சை யரியவிருப்பம்.

2. வாழைப்பயிர் கருப்புரேகடை பூமியில்தான் லாபகரமாயிருக்கின்றது. மண் கெட்டியான செவ்வலில் இப்பயிர் அவ்வளவு லாபகரமானதாகத் தோன்றவில்லை. இங்கன மொத்த செங்கட்டையில் வாழைப்பயிர் செழிப்பாக வளர வேண்டுமானால் எந்த முறைகளைக் கையாள வேண்டும்.

3. நமது சென்னை ராஜதானியில் முக்கியமான பணப்பயிர்களில் ஒன்றாயிருக்கின்ற வாழை விவசாயத்தின் அபிவிருத்தியைக் கோறி விவசாய டிபார்ட் மெண்டார் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார்களா? இதைப் பற்றி நாளது வரையில் டிபார்ட்மெண்டார் யாதொரு முயற்சியும் எடுத்துக் கொண்டிராத வரையில் தாங்களாவது வாழையபிவிருத்தியைக் குறித்து ஒரு பண்ணை ஏற்படுத்துமாறு கவர்ன்மெண்டுக்கு ஒரு கடிதம் எழுதிசிபார்சு செய்வான் வேண்டி தங்கள் மேலானகனத்தை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

4. இப்பிராந்தியத்தில் நல்ல ஜாதி எலுமிச்சை உண்டுபண்ண விருப்பம். தங்கள் ஜெகன்னாதபாக் தோட்டத்தில்நல்லஜாதி எலுமிச்சை செடிகளிருப்பதாக கிருஷிகன் முன் சஞ்சிகைகளில் படித்திருக்கிறேன். இப்பவும் சாத்தியமானால் தங்கள் மேல் பார்வையில் விதைக்காக பொருக்கின 100 பழங்களாகவோ அல்லது 100 பழங்களை அவ்விடத்திலேயே கசக்கி எடுத்த விதைகளாகவோ அனுப்பித்தரமுடியுமானால் அதன் விலை விபரம் முதலானவற்றை தெரியப்படுத்தினால் சிலவு தொகையுடன் முன் பணமாக அனுப்புகின்றேன்.

இங்ஙனம்,

எம். ராமதாஸ்

மைசூர் ஜனப்பிரதிநிதி சபை மெம்பர், பாரதி எஸ்டேட்.

பதில்

1. ஒரு எக்கர் பூமியில் வாழைப்பயிர் செய்து தக்கமாசூல் கொடுத்தால் பூமியிலிருந்து அப்பயிர் 200 ராத்தல் நைட்ரஜன் உரசத்தையும் 80 ராத்தல் பிரகாசிதாமில உரசத்தையும், 800 ராத்தல் போட்டாஷ் உரசத்தையும் அப்புறப்படுத்துவதாய ரசாயன நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். சாதாரண விவசாயிகள் நைட்ரஜன் சத்தை தழை சத்தென்றும், பிரகாசதாமில சத்தை தான்ய சத்தென்றும், போட்டாஷ் சத்தை சாம்பல்கார சத்தென்றும் சொல்வதுண்டு. தழை சத்து தழைகளிலும் ஆடு, மாடு, புண்ணாக்கு, மீனெரு, சல்

பேட் ஆப் அம்மோனியா, நைட்ரேட் ஆப் சோடா, இரத்த எரு, முதலியவைகளில் வெவ்வேறு அளவாய் இருக்கும். பிரகாசதாமில சத்து எலும்புத்தூள் சூப்பர்பாஸ்பேட், மீன்குவானோ, முதலியவைகளில் வெவ்வேறு அளவிலிருக்கும். பொட்டாஷ் சத்து, எருமுட்டை சாம்பலிலும், மரச்சாம்பலிலும் நெல் உமி எரித்த சாம்பலிலும், பருத்திமாறு சாம்பலிலும், குளத்திலும், சமுத்திரங்களிலும் உண்டாகும் பாசிகளிலும், வெடியுப்பு முதலிய எருக்களிலும் இருக்கிறது. எந்தெந்த எரு தினுசு எங்கெங்கே சகாயமாய்க் கிடைக்கக்கூடுமோ அதை வாங்கி உபயோகித்தால் லாபகரமாயிருக்கும்.

2. வாழைப் பயிர், மண் கெட்டியான செவ்வலில் அவ்வளவு லாபகரமாய் வரவில்லையென்று சொல்லி அதற்கு ஆலோசனை கேட்பது மாத்திரம் போதாது. ஏனென்றால் நிருபநேயர் குறிக்கும் மண்ணின் கூருபாடு எவ்வித பயிருணவுகள் அடங்கியுள்ளதென்று தெரியும் வரை தக்க ஜவாபு யாராலும் அளிக்க முடியாது. என்றாலும் நிருபநேயர் குறிக்கும் தினுசு மண்ணில் இந்திரியவஸ்து போதுமான அளவு இல்லாதிருக்க வேண்டுமென்று யூகிக்க இடம்கொடுக்கிறது. நிருபநேயர் இப்பேர்ப்பட்ட நிலங்களில் கொள்ளு, காராமணி, மொச்சை இவைபோன்ற கோதுப் பயிர்களை விளைவித்து நிலத்தில் உழுது மக்க வைத்து அம்மண்ணில் வாழைப் பயிர் தக்க எருச் செய்து, பரிசை செய்து அனுபோகத்தை தெரிவித்தல் நலம். மற்றப்படி நிலத்தை ரசாயன கூருபாடு செய்து கண்டு கொள்வதே விசேஷம்.

3. விவசாய டிபார்ட்மெண்டார், இராஜதானியில் முக்கியமாய் கரும்பு, பருத்தி, மணிலாக்கொட்டை முதலிய பயிர்களிலும் நெல்லு தென்னை முதலிய பயிர்களிலும் தற்காலம் கவனம் செலுத்தி வருகிறார்கள். நமது இராஜதானியில் பயிராகும் பயிர்களில் வாழை அதிக சொற்ப பாகமாகையால் அதைக் குறித்து டிபார்ட்மெண்டாருக்கு எழுதினாலும் அவர்கள் உடனே கவனம் செலுத்துவார்களென்று நாம் நம்பவில்லை.

4. தற்காலத்தில் நமது தோட்டத்தில் எலுமிச்சை செடிகள் நல்ல செழிப்பாயில்லை, ஏனென்றால் சென்ற 3 வருஷங்களாய் மழையில்லாத சங்கடத்தினால் கிணறுகளில் செடிகளுக்கிறைக்கப் போதுமான ஜலம் இல்லை. ஆனால் தென் ஆற்காடு ஜில்லா திண்டிவனத்தில், கோஆப்பரேடிவ் பாங்க் செக்ரடரி மாராஸ்ரீ ஓமண்டூர் ராமசாமிரெட்டியார் அவர்களுக்கு எழுதிக் கொண்டால் நல்ல பெருக்கின பழங்களாக 100 பழங்கள் விதைக்கு தங்கள் விலாசத்திற்கு அனுப்பக்கூடும். அவர்களுக்கு நேரே எழுதுவது நலம். அநேகமாய் 100 பழத்தின் கிரயம் அவ்விடத்தில் 2 ரூபாய்க்கு மேல் போகாதென்பது எமது அபிப்பிராயம். அவர்களுக்கு நிருபநேயர் நேரில் எழுதித் தெரிந்து கொள்ளலாம். 2 வாரத்திற்கு முன் அவர்களை நாம் பார்க்க நேர்ந்தபோது அவர்கள் தம்மிடத்தில் பெரிய பழதினுசு தற்காலமிருப்பதாகச் சொன்னார்கள்.

ப. ர.

ஐயா,

எனக்கு விவசாய விஷயமாக உள்ள ஆசையால் தங்களுக்கு எழுதின வேண்டுகோளுக்கும் இதுவரை பதில் கிடைக்கவில்லை. இந்த மாதம் வந்த கிருஷிகனிலும் பிரசுரமாகவுமில்லை. இதற்கு முன் சேலம் எஸ். கே. அப்துல் ரஹிமான் சாய்பு இடமிருந்து தருவித்த உள்ளிவிதை முதலான அநேக விதைகள் முளைக்காமலே போனதினால் உள்ளி விதை ஒரு எக்கருக்கு தருவித்துக் கொடுக்கும்படி பலமுறை டிப்டி டைரெக்டர் அவர்களுக்கு எழுதினேன். பதில்கூட கிடைக்கவில்லை. தங்களிடமிருந்தும் உதவி கிடைக்கவில்லை. உயர்ந்த தரம் கரும்பு இனுக 100 கணுக்கள் வீதம் வேணுமென்று தங்களுக்கும் அவர்களுக்கும் எழுதினேன். இதுவரை என் ஆவல் தீரவில்லை. காலமும் போகிறது. கரும்புக்கு 10 செண்டு நிலமும் உள்ளி நாத்துப்பாவி நட 1 எக்கரும் தயாராயிருக்கிறது. உள்ளி கிழங்கு வாங்கி நட காலம் தப்பிவிட்டது. ஷை இரண்டுக்குமுள்ள விதைகளையும் விலையும் தெரிந்தால் மணியார்டர் அனுப்பத் தயாராயிருக்கின்றேன். உள்ளி கிழங்குகள் இப்போது ரொம்பவும் காம்தான். நாத்துவிட்டு நடுவதில் பலன் ஜாஸ்தி கிடைக்குமென்று நிபுணர்கள் சொல்லுவதால் அதில் நோக்கம். எக்கர் 1க்கு விதை எத்தனை ராத்தல் வேணும். எவ்வளவு விஸ்தீரணத்தில் எவ்விதம் பாவவேணும், வாரத்தில் எத்தனை நாள் தண்ணீர் பாய்ச்சவேணும். விதையின் விலை ரயில் சார்ஜ் எவ்வளவாகும் என்றும் கரும்பு உயர்ந்த லாபம் தரக்கூடிய ஜாதி எத்தனை? குறைந்த ரயில் சார்ஜில் எத்தனை கணுக்கள் அனுப்பலாம். 10 அல்லது 25 செண்ட்டுக்கு எத்தனை கணுக்கள் வேணும்? அதின் விலை ரயில் செலவு உட்பட எவ்வளவு வேணும் என்பதை மறுதபாலில் பதிலனுப்பக் கோருகிறேன். பதிலுக்காக ஒரு அணா தபால் ஸ்டாம்பு இதில் அடக்கம் செய்திருக்கின்றேன். ஷை விதைகளை சம்பாதித்து அனுப்பத் தங்களுக்கு ஏற்படும் சிரமத்துக்கு எப்பவும் நன்றியுடன் நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தங்களன்பிற்குரிய,

ஜி. சங்கரநாராயணய்யர்.

பதில்

ஒரு எக்கர் உள்ளி நாத்து நடவேண்டுமென்றால் 10 முதல் 12 ராத்தல் நிறையுள்ள புனவிதை தேவையாயிருக்கும். இது ராத்தல் ஒன்று அநேகமாய் 1 ரூ. விலையாகும், இன்னொரு கிருஷிகர் இவ்விதை தருவித்துக் கொடுக்க வேண்டுமென்று 2 மாதத்திற்குமுன் கேட்டு நான் கூடலூருக்கடுத்த தேவனும் பட்டணத்திற்கு எழுதியபோது விதை தற்காலம் கையிருப்பில்லையென்று பதில் கொடுத்திருக்கிறார்கள். இவ்விதை மயிலத்திற்கு சமீபம் உள்ள கிராமங்களிலும், சோளிங்கபுரத்திற்கு சமீபத்திலுள்ள தூமூர் ராமஞ்சேரி கிராமங்களிலும், திருநெல்வேலி ஜில்லாவில் திருச்செந்தூர் தாலூகா குலசேகரப்பட்டணம் முதலிய இடங்களிலும் கிடைக்கும். கோவி-

பட்டி விவசாயப் பண்ணை சமீபத்திலிருப்பதால் தென்காசியிலிருக்கும் விவ சாய டிமான்ஸ்டிரேட்டர் மூலியமாய் எழுதி பெற்றுக் கொள்ளலாம்' எப்ப டியானாலும் இவ்வருஷம் கிருபையருக்கு உபகாரப்படுமோ என்று எமக்குச் சந்தேகமா யிருக்கிறது. ஆகையால் உள்ளிக் கிழங்குகள் வாங்கி நடுவதே இந்த சந்தர்ப்பத்தில் சகாயமா யிருக்கும்.

கரும்பு கணுக்களைக் குறித்து திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண் டம் தாலூகா ஆழ்வார் திருநகரிக்குச் சமீபத்தில் சிலரும், அம்பா சமுத் திரம் தாலூகா ரவணசமுத்திரம், கடையம், ஆழ்வார்குறிச்சி முதலிய இட ங்களில், நூதன தினுசு கரும்புகள் சில கிருஷிகர் நட்டு பரீக்ஷை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கெழுதி பெற்றுக் கொள்வது சகாயமாயி க்கும். மற்ற இடங்களிலிருந்து வரவேண்டுமென்றால் ரயில் சார்ஜு அதிகமா கிவிடும். பி. ஜி. பி. ஜாவாசீர் 247, பார்படாஸ் No 208 ஆகிய 3 தினுசுகள் சிறந்தவை.

100 சென்ட் நிலம் அதாவது ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15,000 கணு க்கள் போதும். நாம் ஏக்கர் ஒன்றுக்கு 8,000 கணுக்கள் நட்டு சுக்கப்படி பயிர் செய்து லாபம் அடைந்திருக்கிறோம். சில இடங்களில் ஏக்கருக்கு 30,000 நடும் வழக்கமுண்டு, ஆனால் இது வீண் செலவு. பாலூர் விவசாயப் பண்ணையில் 1,000 கணுக்கள் 3½ முதல் 5 ரூபாய் வரையில் விற்று வந்தார் கள். ரயில் சார்ஜ் முதலியன பிரத்தியேகம். ப. ர்.

ஸ்ரீமான் கிருஷிகன் மானேஜர் அவர்களுக்கு (1883) கே. சுந்தரராஜ அய்யவார் எழுதிக் கொள்வது.

கண்வாய் நீர்பிடியில் விவசாயம் செய்யக்கூடிய வாழை கரும்பு இருப்ப தாய் சொல்லுகிறார்கள்! அது கிடைக்குமிடமும் பயிர் செய்யக் கூடிய மா திரியும் அவைகளின் தன்மையும் மற்றும் முழு விவரங்களையும் கிருஷிகன் வாயிலாகத் தெரிவிக்க வேணுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகி கிறேன். இது விஷயம் அநேகருக்கு அதிக உபகாரமா யிருக்கும்.

1883ம் நம்பர் சந்தாதார் G. சுந்தரராஜ ஐயவார்.

பதில்

நீர் பிடியில் பயிர் செய்யக்கூடிய வாழை கரும்பு தினுசுகள் எமது அனு போகத்திற்கு எட்டியவரை இருப்பதாய்த் தோணவில்லை. வடிகால் வசதியில் லாத இடங்களில் இப்பயிர்கள் லாபகரமாய் பயிர் செய்ய முடியாதென்பது அபிப்பிராயம். இப்பேர்ப்பட்ட இடங்களில் இப்பயிர்கள் செய்ய உத்தேசிப் பவர்கள் உயர்ந்த வாப்புகளைப்போல் முகடுகளும் கால்களும் அமைத்து முக டுகள் மேல் பயிர் நட்டு பயிர் செய்யக்கூடும். வாழைக்கு 6 முதல் 7 அடிக்கு ஒவ்வொரு திடு அமைத்து அத்திடுகளில் வாழை நடலாம். கரும்புகளு க்கு 3 முதல் 5 அடி தூரத்திற்கு ஒரு உயர்ந்த வாப்புபோல் 1½ அடி அக லமுள்ளதாய் அமைத்து அவ்வாப்புகள் மேல் 1½ அடி தூரத்துக்கு ஒரு கணு

நட்டு பயிர் செய்யலாம். வெற்றிலை நடும்போது கிடங்குகளில் எப்படி உயர்ந்த இடத்தில் நட்டு பக்கத்தில் தண்ணீர் இறைக்கவும் வடியவும் கால்கள் அமைக்கப்பட்டு பயிர் செய்யப்படுகின்றனவோ அதே பிரகாரம் வாழைப் பயிருக்கும் கரும்புப் பயிருக்கும் வேண்டிய அளவு தூரத்தில் கிடங்குகள் வெட்டி மேட்டில் பயிர் செய்து கிடங்குகளில் தண்ணீர் கட்டி இறைக்கவும், தண்ணீர் வடிக்கவும் சாதனம் அமைத்தால் எந்த தினுசு வாழையும் கரும்பும் நடலாம். ஆனால் இப்படி செய்வதில் பிடிக்கும் செலவு ஜாஸ்தியாகுமென்பதில் சந்தேகம் கிடையாது. இப்போதும் வடிகால் வசதி சரியாயில்லாத இடங்களிலும் நன்செய்களிலும் கொடிக்கால் பயிர் செய்யும்போது அத்துடன் வாழை, கரும்பு, மஞ்சள், கருணை முதலிய பயிர்கள் இவ்விதம் ஊடு பயிராய் செய்வது ஆங்காங்கு நமது சந்தாதாரர்கள் கவனித்திருப்பார்களென்பதற்கு ஐயமில்லை. ப ர்.

ஐயா, பின் வரும் கேள்விகளுக்கு விவரமான பதிலளிக்கக் கோருகிறேன்.

1. வெங்காயம் எந்தப் பட்டங்களில் நடுகிறார்கள்: எந்தப் பட்டத்தில் வெங்காயக் கிழங்குகள் நடலாம்.

2. வெங்காய விதைக் கிழங்கு எவ்வாறு சேகரிப்பது?

3. வெங்காய விதைக் கிழங்குகள் நட்ட பின் தண்ணீர் கட்ட வேண்டுமா? அல்லது தண்ணீர் கட்டி நடுதல் நலமா?

4. உயிர் தண்ணீர் எப்போது கட்ட வேண்டும்?

5. ராகி அறுத்த தாளடியில் வைகாசி மாசமே நடலாமா? முன்னால் நடலாமா? கத்திரி வெயிலினால் (அக்னி நக்ஷத்திரத்தால்) கெடுதலுண்டா?

6. மணிலாக் கொட்டை புண்ணாக்கை வெங்காயத்திற்கு எருவாகக் கொடுத்தால் கெடுதலுண்டாமென்று சிலர் சொல்லுகிறார்கள்; உண்மைதானா?

7: வெங்காயப் பயிர் நடுமுன் ஆட்டுக்கிடை கட்டலாமா? அதனால் கெடுதி ஏற்படுமா?

3. பிரபவஹ்ல கிருஷிகன் சஞ்சிகைகள் முழுவதும் அகப்படுமா?

ரங்கசாமி ரெட்டி.

பதில்

1. இரண்டு பட்டங்களிலும் விதை வெங்காயக் கிழங்குகள் நடலாம்.

2. வெங்காயம் வெட்டி யெடுக்கும்போது அதாவது நல்ல முற்றினதாயும், நோயற்றதாயும் வாங்கி நிழலில்உணர்த்தி அடுப்பாங்கரை புகைபடுமிடத்தில் பரண்கட்டி அதன் மேல் பரப்பி வைத்து நடும் காலத்தில் 9-வது வால்யம் 8-ம் நெம்பரில் சொல்லியிருக்கும் பிரகாரம் நாற்றுப் பாவி நடலாம்.

விதைக் கிழங்கு வெங்காயத்தை தண்ணீர் கட்டிய பின்னும் நடலாம் அல்லது நட்ட பின்னும் தண்ணீர் கட்டலாம்.

4. உயிர்த் தண்ணீர் கட்டுவது முக்கியமாய் மண்ணின் இயல்பைப் பொருத்தது. சாதாரணமாய் வெங்காயப் பயிர்நல்ல வடிகால் வசதியுள்ளதில்,

உயிர்த் தண்ணீர் (கிழங்கிற்கும், நாற்றிற்கும்) நட்ட இரண்டு நாட்களுக்குப் பின் கட்டுவதில் கெடுதி சம்பவிக்காது. ஆனால் நடிக்கால் நிலங்களிலும், வடிகால் வசதியில்லாத இடங்களிலும் உயிர்ச் சண்ணீர் இறைத்தால் பூஞ்சான் நோய்கள் உண்டாக இடமாகும். எப்பயிருக்கும் காச்சலும் பாச்சலுமாய்த் தண்ணீர் இறைப்பதே சிலாக்யம். சாதாரண நிலங்களில் 5,6 நாளைக்கொரு முறை தண்ணீர் கட்டலாம். சமுத்திரக்கரை யோரங்களிலும் மணல் பாங்கான நிலங்களிலும் வெங்காயம் பயிர் செய்தால் தினசரி தண்ணீர் பாச்சம் வழக்கமுண்டு. தண்ணீர் எப்போது நிறுத்த வேண்டுமென்ற விஷயம் 9-ம் வால்யம் 8-ம் நெம்பரில் எழுதப்பட்டிருக்கிறது.

5. ராகிப்பயிர் செய்கிற இடத்தில் வைகாசியில் நிலம் தயார் செய்து அந்த மாசமே நடலாம். முந்தி நட்டால் கத்திரி வெய்யிலால் ஒருவேளை கெடுதலுண்டாகக் கூடும்.

6. மணிலாப் புண்ணாக்கைப் போடுவதில் கெடுதல் சம்பவிக்காது.

7. ஆட்டுக்கிடை கட்டுவதில் கெடுதல் சம்பவிக்காது.

8. பிரபஞ்ச பத்திரிகைகள் முழுவதும் கிடைக்கும். ப. ர.

அன்பார்ந்த ஐயா,

தங்களுடையகிருஷிகன் பத்திரிகை 1912ம்நெம்பர் சந்தாதார் எம். பி. செல்லசாமிக் கோனார் தெரிவித்துக் கொள்வது நாளது பங்குனியீ பத்திரிகை நாளது வரை கிடைக்காத காரணம் தெரியவில்லையே. மாடு போடாமல் கமலை இறைக்க இயந்திரம் இருக்கின்றனவா? அப்படியானால் அதின் கிரையம் என்ன? அது எங்கே கிடைக்கும்? கிணற்றில் இன்னும் தண்ணீர்வேண்டியதிருப்பதால் தண்ணீர் ஜாஸ்தி உண்டாக இயந்திரத்தால் உதவியுண்டா? அப்படியானால் அதின் பூரா விபரங்களுடன் இந்த கடிதம் கண்ட உடனே தயவு செய்து பதிலெழுதி அனுப்புவீர் களென்று நம்பி இத்துடன் ஒருகவரும் வைத்து அனுப்பி இருக்கிறேன். அவசியம் பதிலெழுதி அனுப்ப வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எம். பி. செல்லசாமி கோனார்.

பதில்

ஐயா,

இரண்டு வாரக் காலம் நமது அச்சியந்திரம் நிலை பெயர்ந்திருந்தாலும் அதை செப்பனிட தாமதமாகிவிட்டதாலும் நமது பங்குனியீ பத்திரிகை குறிப்பிட்ட தினத்தில் வெளியிட முடியாமற் போனதற்காக மிகவும் வருந்துகிறோம். தங்களுக்கு இப்போது பத்திரிகை அனுப்பி 2 வாரங்களாகிறது. இதற்குள்ளாகச் சேர்ந்திருக்குமென்று நம்புகிறோம்.

தண்ணீர் இறைப்பதற்கு ஆயில் இஞ்சின்கள் 500 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை அநேக கினுசுகள் சென்னையில் மாசி அண்ட் கம்பெனி, பெஸ்ட் அண்டு கம்பெனி, முதலானவர்களிடம் கிடைக்கும். அவ்விஷயத்தைக் குறித்து அவர்களுக்கு நேரில் எழுதித் தெரிந்துக் கொள்ளலாம். ஹீட்லி

அண்ட் கிரெஷாம், வால்காட் பிரதர்ஸ், ஜெஸ்சாப் அண்ட்கம்பெனி முதலி யவர்களிடமும் கிடைக்கும் அவர்களுக்கு எழுதினாலும் கேட்லாக் விலை விவா ங்கள் அனுப்புவார்கள். 7 கவலைக்கு தண்ணீர் கொடுக்கக் கூடிய கிணர்க ளில் மாத்திரம் மேற்படி என்ஜின்களை வைப்பது லாபகரமா யிருக்கும். இல் லாவிடில் லாபகரமாயிராது.

சென்னை கைத்தொழில் இலாக்காதாருக்கு மனுச்செய்து கொண்டால் கிணர்களில் துளை போட்டு கையினாலாவது, இயந்திரத்தினாலாவது பாதாள கங்கை கண்டு பிடிப்பதற்கு யோசனை சொல்லுவார்கள். ப. ர.

அன்புள்ள ஐயா, குளித்தலை 15-2-28

தங்கள் கிருஷிகன் பத்திரிகைக்கு நான்ஒரு சந்தாதாரா யிருக்கிறேன். தய வுசெய்து முந்திய வால்யூங்கள் அகப்படுமா எனத் தெரிவிக்கக் கோருகிறேன்.

தங்கள் அன்புள்ள

L. மாணிக்கவாசகமுதலியார்

பதில்

நம்மிடம் கிருஷிகன் 9-ம் 10-ம் வால்யங்கள் தவிர வேறொன்றும் கள் இல்லை. ப. ர.

புஸ்தகவிமர்சனம்

ஜயசக்தி.

புதிய மாதஸஞ்சிகை- வருஷசந்தா அணா 12- ஜயசக்தி ஆபீஸ் புத்தன் சந்தை திருவனந்தபுரம்-

இதன் ஆசிரியரான ஸ்ரீமான் இராமபத்திர சர்மா அவர்கள் பழ ங்காலத்திய வித்வமணிகளில் ஒருவர்- அவரது வியாசங்களும் பிறவும் வெகு லாகமாய்ப் பார்த்து சிலாக்கித்து வந்திருக்கின்றோம்.

ஆசிரியத்திறமை இவருக்குப் பெரிதும் உண்டு-பிராசின நாகரீகத்தில் மிக்கப் பற்றுதலுள்ளவர்- இவரது புதிய ஜெயசக்தியை அனைவரும் வாங்கி ப்படித்துப் பயனடைய வேண்டு மென்று விரும்புகிறோம்- அதற் கேற்ற வாறு பத்திரிகையும்— நன்சனமந்துள்ளது- ப ர.

குறிப்புகள்

உலகத்தில் ஜாஸ்தி தித்திப்புள்ள சேடி

1829-ம் வருஷத்தில் முதல் முதல் கண்டு பிடித்து அப்பால் அமெரிக் காவிலுள்ள ரையோடி ஜெனரோவென்ற பட்டானிக்கல் தோட்டத்தில் 1918 வருஷம் முதல் கொண்டு ஒரு நூதன செடியை பரீக்ஷை செய்து கொண்டு வருகிறார்கள். இதை அமெரிக்கா தேசத்துக்காரர் "காகி" என்று சொல்லு கிறார்கள். இந்தச் செடியின் இலைகள் நமது தேசத்து சர்க்கரையைவிட 200 மடங்கு ஜாஸ்தி தித்திப்பு கொடுக்கிறதாம். இத்துடன் இதிலிருக்கும் தித்திப்புசத்து புளிப்பேராத குணத்தையும் பொருந்தி யிருக்கிறதாம் ஆகையால் இது நீரழிவு வியாதி உள்ளவர்களுக்கு ரொம்பவும் உபயோகப்படு மென்று யூகிக்கப்படுகிறது. ஆனால் இதனால் யாதொரு தீங்கும் சம்பவிக்கா தென்ற விஷயம் இன்னும் நிச்சயமாய்த் தெரியவில்லை.

கிருஷிகன் பஞ்சாங்கம்

ப்ரபவ ஸூ வைகாசிமூ—சாலிவாகன 1850 கலியுகாதி 5029

பசலி 1337—கொல்லம் 1103—ஹிஜரி 1346,

இங்கிலீஷ் 1928-ம் ஸூ மே,—ஜூன் மாதங்கள்.

இங்கிலீஷ்	மே	வைகாசி	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
23	14	1	திங்	நவ17-44	சத24-4	சி60	விதைக்க மாடுவாங்க
24	15	2	செ	தச13-4	பூரட்21-6	ம21அ	எத்தம்நட
25	16	3	புத	ஏகா6-52 துவா52-28	உத்16-37	சி17ம	கிருஷிஆரம்பம்
26	17	4	வி	திர50-33	ரே10-52	சி11-ம	விதைக்க
27	18	5	வெ	சது41-45	அசு4-12 பர52-46	அ4சி	மாடுவாங்க
28	19	6	ச	அ ● 32-24	*49-47	அ60	சூரங்கம்வெட்ட
29	20	7	ஞா	பிர23-13	ரோ42-50	சி60	கரிநாள்
1	21	8	திங்	துதி14-40	மிரு36-36	அ37-சி	கிணறுவெட்ட
2	22	9	செ	திரி7-8	திரு31-27	ம32-சி	தானியம்கட்ட
3	23	10	புத	சது0-52 பஞ55-18	புந27-48	சி6	கிருஷியாரம்பம்
4	24	11	வி	சஷ்53-18	பூச25-58	அ26சி	விதைக்க
5	25	12	வெ	சப்52-17	ஆயி25-56	ம60	சாந்திசெய்ய
6	26	13	ச	அஷ்53-11	மக27-45	அ28-சி	தானியம்வாங்க
7	27	14	ஞா	நவ55-50	பூர31-23	சி31-அ	மாடுவாங்க
8	28	15	தி	தச59-57	உத்36-35	சி60	கிணறுவெட்ட
9	29	16	செ	ஏகா-60	அஸ்43-0	சி60	மாடுவாங்க
10	30	17	புத	ஏகா5-11	சித்50-14	சி50	தானியம்செலவிட
11	31	18	வி	துவா11-9	சுவா57-54	அ58சி	மாடுவாங்க
12	1	19	வெ	திர17-28	விசா60-0	சி60	விதைக்க
13	2	20	ச	சது23-52	விசா5-38	சி60	தானியம்வாங்க
14	3	21	ஞா	ப○29-54	அநு13-11	ம60	விதைக்க
15	4	22	திங்	பிர35-20	கேட்2016	சி60	மாடுகொள்ள
16	5	23	செ	துதி39-57	மூல26-39	அ27-சி	தானியம்செலவிட
17	6	24	புத	திரி43-34	பூரா32-2	அ60	மாடுவாங்க
18	7	25	வி	சது46-2	உத்36-18	சி60	விதைக்க
19	8	26	வெ	பஞ்47-11	திரு39-20	ம60	கதிரறுக்க
20	9	27	ச	சஷ்46-56	அவி41-0	சி41-அ	விதைக்க
21	10	28	ஞா	சப்45-12	சத41-12	சி60	மாடுவாங்க
22	11	29	திங்	அஷ்42-1	பூரட்39-58	சி60	எத்தம்போட
23	12	30	செ	நவ37-26	உத்37-20	அ37சி	தானியம்வாங்க
24	13	31	புத	தச31-33	ரேவ33-23	ம60	மாடுவாங்க

ஜெயரங்கன்

J. R. ரங்கராஜு

அவர்களால்எழுதப்படும் புது நாவல் அச்சிலிருக்கிறது கூடியசீக்கிரத்தில்வெளிவரும்.

தமிழ்ப் பேராசிரியன்

மாகறல்—கார்த்திகேய முதலியார்

அவர்கள் இயற்றிய

மொழிநூல்

இந்நூல் பண்டைத்தமிழ் நூலாராய்ச்சி செய்வோருக்கும் சரித்திர ஆராய்ச்சிக் காரருக்கும் பெரும்பயன் தருவது. தமிழில் இது காறும் எவராலும் இயற்றப் படாத அரிய பெரிய புது நூல். தமிழின் கண்ணுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் தெளிவாய் உற்பத்தி முதலியன எடுத்துக் கூறுவது. தமிழேயன்றி மற்றைப் பாஷைகளினு முள்ள சொற்களின் உற்பத்தி முதலியவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் சாதனமா யுள்ளது.

உயர்ந்த நல்ல பளபளப்பான கடிதத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது. தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் அவசியமாக யிருக்க வேண்டியது. இதன் விலை காலிகோ கட்டடம் ரூ. 2

மா-மா- இராமசுவாமி முதலியார்

பழந்ததமிழ்ப் புத்தகசாலை.

கிண்டி, சைதாப்பேட்டை போஸ்டு,

சென்னை

கம்மபாலன்

தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிக்கை இஃதொன்றே. கிராம வாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தக பாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

R. வெங்கடசாமி நாயுடு,

பத்திராதிபர் கம்மபாலன்

திருத்தாங்கல்.

The Journal of the Madras Agicultural Students' Union.

A monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign Subscription per annum Rs Four. Single copy as Six.

Apqly to Manager M. A. S. U. Journal.
AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P. O. *Coimbatore*

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

ச ண் ப க வி ஜ ய ம்

இந்த நாவல் "இது சிறந்த நாவல்" படிப்பதில் ஆர்வ முடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது.

இது பால விநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு. அ சுப்பரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில்எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச் சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும் நல்லாரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

ஜெகன் மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

விவசாய புத்தகங்கள்

	ரூ அ பை
விவசாய விளக்கம்	1—4—0
நெல்	1—0—0
கரும்பு	1—0—0
மா	0—7—0

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு

பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்

Printed and Published by J. R. Ranga Raju at the Raju Press" "Jagannatha Baugh" Saidapet, (Madras.